When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூ2/50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ ஆடி மீ 09 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 20 (24 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 196

## வடக்கு, கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த

# எல்லா தமிழ் குழுக்களுடனும்

# அரசு பேச்சுக்கள் நடத்தும்

### ஐ. தே. க. கூட்டத்தில் ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

நாட்டின் வடக்கு, கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் முதல் நடவடிக்கையாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்தோம். இம்முயற்சிகள் மேலும் விஸ்தரிக்கப்படும்.

ஏற்கனவே ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈரோஸ், ரெலோ, புளொட் ஆகியவற்றுடனும் நாம் பேச்சுக்களை நடத்த உத்தேசித்துள்ளோம்.

- இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்று அறிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஏனைய அரசியல் கட்சிகளான சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், இ தொ. க., ஐ தொ. க., முஸ்லிம் லீக், லிபரல் கட்சி, ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட பதிவு செய்யப்பட்ட சகல கட்சிகளையும் சேர்த்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. என்றும் அவர் சொன்னார்.

அத்துடன் சகல இனங்கள் மதங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களையும் இச்சமாதானப் பேச்சுக்களில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மத்திய கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இந்த அறிவிப்பை விடுத்தார்:

திகாரப்பரவலாக்கல் என்ற உள்ளூர் நடவடிக்கையைக் காரணமாக வைத்து வெளிநாட்டுப் படை ஒன்று இங்கு தங்கியிருக்கத்தான் வேண்டும் என் வாதம் நியாயமற்றது.

அதிகாரப்பரவலாக்கல் என்பது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்பதை மறந்துவிடக்கூடாது — இவ்வாறு ஜனாதிபதி மேலும் சொன்னார். (உ-எ)

### வெலிக்கடைபடுகொலை நினைவுதினம்:

## நாளை ஹர்த்தாலுக்கு ரெலோ அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வெலிக்கடைச் சிறையில் 1983 ஜூலை 25 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை சம்பவங்களை நினைவு கூரும் முகமாக நாளை செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தால் அனுட்டிக்குமாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இது தொடர்பாக அவ்வமைப்பு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

வெலிக்கடை சிறைச்சாலையில் 1983 ஜூலை 25 இல் கொடூரமான முறையில் குத்திக் கிழித்து படுகொலை செய்யப்பட்ட தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி உட்பட 53 போராளிகளினதும் நினைவு தினம் நாளையா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்த ஜூலை குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24

1983 ஆம் ஆண்டு ஜூலையில் வெலிக்கடை சிறையில் 53 தமிழ்ப் போராளிகள் கோரத்தனமாக கொலை செய்யப்பட்டதின் 6 ஆம் வருடத்தை நினைவு கூரும் முகமாக ஈ. பி. ஆர். எல். எவ். பத்திரிக்கை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

1983 ஜூலை இந் நாட்டில் மனித குலம் உள்ளளவும் நினைவு கூரக் கூடிய இரத்த ஜூலை ஆகும்,

அரசினதும், ஆயுதப்படைகளினதும், அனுசரணையுடன் யு. என். பி. அரசினால் கட்டவிழ்த்தி விடப்பட்ட சிங்கள பேரினவாத இன வெறி ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிரைக் குடித்து பல நூறு கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அழித்து கோரத் தாண்டவமாடி நாட்டை இரண்டு படுத்திவிட்ட சம்பவத்தை நாம் என்றுமே மறக்க முடியாது.

ஸ்ரீலங்கா அரசின் இன்றைய நெருக்கடிக்கெல்லாம் இதுவே அடிப்படையாக அமைந்தது: இவற்றுக்கெல்லாம் சிகரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நேற்று முதல் துக்கம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 24

வெலிக்கடைப் படுகொலைகளின் ஆறுவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களில் நேற்று ஞாயிறு முதல் நாளை செவ்வாய் வரை துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

நேற்று மட்டக்களப்பு— அம்பாறை மாவட்டங்களில் வீதிகள், பொது இடங்கள், வாகனங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மணிக்கூண்டுக் கோபுரத்தில் குட்டிமணி, ஜெகன் ஆகியோரின் பெரிய அளவிலான உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று ரெலோ அறிவித்துள்ளது. (இ-21)

## அமெரிக்க வீஸா: யாழ்ப்பாண வாசிகளுக்கும்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க வீஸா பெறுவதற்காக கம்பியூட்டர் மூலம் தெரிவு செய்யப்பட்ட இலங்கையரில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிலருக்கும் அதிஷ்டம் கிடைத்துள்ளது.

இவர்களுக்கு கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைத்துள்ளது;

குளப்பிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் இராசமாலினி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இதயகுமாரன் வாலாம்பிகை ஆகியோருக்கு விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளன.

உரும்பிராய், யாழ். பிறவுண் வீதி ஆகிய இடங்களில் உள்ள மற்றும் மூவருக்கும் விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் சுட்டுக்கொலை!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினதும் சுதந்திர தொலைக்காட்சி அமைப்பினதும் (ஐ.ரி.என்.) தலைவரான திரு. டெனிஸ் குருகே இனந் தெரியாத நபர்களால் நேற்றுக் காலை கொழும்பில் அவரது வீட்டிற்குச் சமீபமாக வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

திரு. குருகே தமது வீட்டிற்கு அண்மையிலுள்ள ஆலயமொன்றிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த சமயம் காரில் வந்த நபர்கள் அவரைச் சுட்டுக் கொன்றனர் என்று பொலீஸார் தெரிவித்தார்கள்.

பத்திரிகைத் தணிக்கையை அமுல் செய்வதற்காக அண்மையில் நியமிக்கப்பட்ட சபையின் தலைவராகவும் (பிரதம தணிக்கையாளருமாக) இவர் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-க)

## டிரக் மீது சூடு; மக்கள் ஓட்டம்

வல்வெட்டித்துறை ஜூலை 24

திக்கம், மாலுண்டிப் பகுதியில் நேற்று டிரக் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து சந்தைப்பகுதியில் கூடியிருந்தோர் சிதறி ஓடினர். அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (ஓ-160)

## ஷெல்லுக்கு சிறுமி பலி! கிளிநொச்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கிளிநொச்சிப் பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் சிறுமி ஒருவர் பலியானார்.

மரிசிலின் அனெ (வயது 11) என்ற சிறுமியே மரணமானவராவர்.

கிளிநொச்சி, இரணைமடு வீதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்றும்-

அப்போது மேற்கொள்ளப்பட்ட ஷெல்களில் ஒன்று வீடொன்றின் மீது விழுந்து வெடித்ததால் சிறுமி படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சிறுமியை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரும் வழியில் இறந்துவிட்டார் என்று கூறப்பட்டது. (ஓ-10)

### அன்பார்ந்த வாசகர்களே!

மின்சாரத் தடை ஏற்பட்டு பத்துத் தினங்கள் கழிந்து விட்டன. பத்திரிகை மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று என்பதால், பல சிரமங்கள், கஷ்டங்களின் மத்தியிலும் பெரும் பிரயத்தனம் செய்து உதயனை வெளியிட்டு வருகிறோம், அதன் பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகிறது.

நிலைமை இப்போது மோசமாகி உள்ளது. தற்காலிகமாக நாம் பயன்படுத்திவரும் 'ஜெனரேட்டர்' பழுதானமையால் உதயனை வெளியிட முடியுமா என்ற தடங்கல் நிலைநேற்று உண்டாயிற்று. எனினும் எங்கள் சக்தி முழுவதையும் பயன்படுத்தி, உதயனை இன்று உங்களுக்குத் தந்துள்ளோம்:

நகரில் உள்ள பல கேந்திர நிலையங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டுள்ள போதிலும் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய பத்திரிகைச் சேவைக்கு இன்னமும் மின்சார வசதி கிடைக்கவில்லை.

அதன் நிமித்தம் எமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் பக்கங்களைத் தொடர்ந்து குறைவாக வெளியிட வேண்டிய நிர்ப்பந்தமும் பத்திரிகையைப் பிரசுரிக்க முடியாத நிலையும் ஏற்படக்கூடும் என்பதை மிகவும் மனத் தயக்கத்துடன் உங்களுக்கு முன்கூட்டியே அறியத்தருகிறோம்.

மின்சார வசதி கிடைத்தால் மட்டுமே அந்த நிலையைத் தவிர்த்துக்கொள்ள முடியும்:

—நிர்வாகிகள்

## ஈரோஸ் அலுவலகங்களில் பாதுகாப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணத்தில் ஈரோஸ் அலுவலகங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே இப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அலுவலகங்களுக்கு முன்னால் மண் மூடைகள் அடுக்கப்பட்டு ஈரோஸ் உறுப்பினர்கள் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ஓ-10)

## சோவுக்கும், ம. பொ.சிக்கும் பொலீஸ் பாதுகாப்பு!

சென்னை, ஜூலை 24

சென்னையில் பிரபல பத்திரிகையாளர் 'சோ' ராமசாமிக்கும் திரு. ம. பொ. சிவஞான கிராமணியாருக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டார்.

இருவருக்கும் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து 24 மணி நேரமும் பாதுகாப்பு வழங்கும்படி முதலமைச்சர் உத்தரவு பிறப்பித்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மின்சார விநியோகம் கிடைப்பது தாமதமாகும்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

இலங்கை மின்சார சபையின் மின் விநியோகம் வட பகுதிக்குக் கிடைப்பதில் மேலும் தாமதம் ஏற்படலாம் என இலங்கை மின்சார சபையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மின் விநியோகம் நேற்று வடபகுதிக்குக் கிடைக்குமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அநுராதபுரத்திற்கும் மதவாச்சிக்கும் இடையில் மேலும் இரு மின் கோபுரங்கள் சேதமாக்கப்பட்டிருப்பது தற்போது தெரியவந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது

வடபகுதிக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்காக — சேதமுற்ற மின்கோபுரங்களை திருத்தும் — வேலைகள் மேற்கொண்ட வேளையில் வேறு சில மின்கோபுரங்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றனவாம் (உ-9)

### முச்சந்தி முரளி



பவர்கட் ஒரு தொடர் கதை தானே... ... ... ...!

### இந்தியா-இலங்கை

## இரண்டு நாடுகளையுமே அமெரிக்கா ஆதரிக்கிறது

கொழும்பு, ஜூலை 24

அமைதிப் படை விலகல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளையுமே ஆதரிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இவ் விவகாரத்தில் இந்தியாவை அமெரிக்கா ஆதரிப்பதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் அமெரிக்காவின் நிலை திரித்துக் கூறப்பட்டுள்ளது என்று வாஷிங்டனில் இராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் மார்கறற் ரட்விலர் தெரிவித்தார்.

இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இரு நாடுகளையும் அமெரிக்கா ஆதரிக்கிறது:

அண்மைக் காலமாக நெருக்கமாக உழைத்த இரு நட்பு நாடுகளும், இலங்கையில் இரத்த ஆறு ஓடும் வாய்ப்பைக் குறைக்கக் கூடிய வகை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எங்களது நாட்டையும், மக்களையும் ஒப்பந்தமே காப்பாற்றியது!

## இப்படிச் சொல்கிறார் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 24

இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான் இலங்கை நாட்டையும், மக்களையும் காப்பாற்றியது. அந்த நேரத்தில் எம்மை அழிவிலிருந்து காப்பாற்றியது இந்த ஒப்பந்தம் தான்.

—இவ்வாறு கூறினார் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன. கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

மன்னிக்கவும்; நான் நடப்பு அரசியல் பற்றி பேசமாட்டேன் கொந்தளிக்கும் கடலில் இருந்து துறைமுகம் வந்து சேர்ந்த கப்பல் போன்ற நிலையில் நான் இருக்கிறேன்

நான் 'துறைமுகம்' வந்து விட்டேன். மீண்டும் கடலுக்கு செல்ல நான் விரும்பவில்லை.

பிரச்சினைக்குரிய விஷயங்களைத் தவிர்த்து வேறு ஏதாவது பேசலாமே!

ஓய்வை நான் அனுபவிக்கிறேன். அதன் அர்த்தம் முன்னர் என் வேலையை அனுபவிக்கவில்லை என்பதல்ல. எனது இலட்சியமே "செய்பவற்றை அனுபவித்து செய்ய வேண்டும்" என்பதே.

1977 இல் பதவிக்கு வந்த நான் போர்க்கால நிலைமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

24—07—1989

ஆடி 09 — திங்கட்கிழமை

நக்ஷத்திரம்: உத்தரட்டாதி சுபநேரம்:

12.02 முதல் 01.32 வரை ராகுகாலம்:

07.32 முதல் 09.02 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

ஆசிரியர்களுக்கான விண்ணப்பபடிவம் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு:- கனன் போட்டோ கொப்பிங் சேவிஸ், மணல் ஒழுங்கை, தும்பளை பருத்தித்துறை. (1316)

பொமரேனியன் வெள்ளை நிற ஆண் நாய் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு: 23 விதானையார் வீதி, சுண்டிக்குளி. (1315)

நல்ல நிலைமையிலுள்ள J. V. C. வீடியோ டெக் Prosco வீடியோ டெக் Phillipo வீடியோ டெக் Akai O. D O. டெக் Jamaha O. D. O. டெக் இங்கிலிஸ் இரும்புப்பெட்டி வீடியோக் கடைக்குத் தேவையான கவுண்டர் மேசை விற்பனைக்கு உண்டு. தொடர்பு! ஏசியன் ரெக்ஸ்ரைலஸ், பலாலி வீதி, திருநெல்வேலி, (1310)

புதிய C. G. 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். Dr. சிவசுப்பிரமணியம், பெரிய ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம். (1314)

### மணமகன் தேவை

யாழ். இந்து வேளாளர் 34 வயது அழகு, குணம், செல்வம் கொண்ட கொழும்பில் தொழில் பார்ப்பவரும் கொழும்பில் வீடு உள்ளவரும் நன்றாக ஆங்கிலம் பேசக்கூடியவரும் பொறுப்புகளற்ற நிலையில் விவாகரத்துப் பெற்ற பெண் நல்லகுணமுடைய மணமகனைத் தேடுகின்றார். பொறுப்புகளற்ற நிலையில் விவாகரத்துப் பெற்றவரும் வெளிநாட்டில் உள்ளோரும் கருதப்படுவர், சாதகத்துடன் முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். No. 568 C/o உதயன்; (1311)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(DEKALB) பிறவுண் பேடு சேவல் (COBB) புறொயிலர் குஞ்சுகள் (26 - 7 - 89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1309)

### தவறிவிட்டது

சிங்கள மொழியில் புஸ்ப காந்தி கந்தையா மருந்தாளர் அம்பாந்தோட்டை, என்ற விலாசமுடைய தேசிய அடையாள அட்டையும், திருமதி பு. கதிர்காமநாதன் மருந்தாளர் பெரிய ஆஸ்பத்திரி பதுளை என்ற இரு அடையாள அட்டைகளும், சிவப்பு நிற பேசுடன் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்; (1317)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள செவ்வாய்க்குற்றமுள்ள 34 வயது வங்கி Officer க்கு Bsc அல்லது வங்கியில் வேலை செய்யும் பெண் தேவை மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (11598)

### SPOKEN ENGLISH

Spoken English புதிய பிரிவு செவ்வாய் வியாழன் நாட்களில் பிற்பகல் நேரம் 3/30 – 5 மணி, ஆரம்பம் 25-07-89 தொடர்பு: S, B Iyar, 12 வைமன் வீதி, நல்லூர் (11609)


## சனசமூக நிலைய அரச நன்கொடை

கரவெட்டி, ஜூலை 24

கரவெட்டி பிரதேச சபையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கும் 88 ஆம் ஆண்டுக்குரிய அரச நன்கொடை வழங்கப்படும் எனவும் 87 ஆம் ஆண்டு நன்கொடை வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள் வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை செயற்குழுக் கூட்ட அறிக்கை முதலியவற்றைச் சமர்ப்பித்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்று இப்பிரதேச சனசமூக நிலைய ஒன்றிய சமாசத்தின் செயலாளர் திரு. இ. வரதராஜன் வேண்டியுள்ளார். (க-70)

## ஏகமனதாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 24

டாக்டர் என். சுப்பிரமணியம் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் உதவிக் காரியதரிசியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் இச்சேவாசிரமத்தின் ஆயுள்கால அங்கத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது (ச)


### கேள்விப் பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் சுமார் 3952 தரம்பிரிக்சப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

முடிவுத் திகதி:- 31-07-89 நண்பகல் 12 00 மணி வரை.

விண்ணப்பப்பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

-பொதுமுகாமையாளர்.
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1989-07-21.
(சி-3084)


## கால்நடை வளர்ப்போர் சங்கம்

பருத்தித்துறை, ஜூலை 24

வடமராட்சி கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது:

பருத்தித்துறை கால்நடை வைத்தியர் கலாநிதி திருமதி பு. தங்கராசாவின் அழைப்பின் பேரில் இவ்வங்குரார்ப்பணக் கூட்டம் பருத்தித்துறை கால்நடை வைத்தியர் காரியாலய விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது (ச-118)


### அறிவித்தல்

பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு யாழ்.மாவட்ட தனியார் கல்விநிலைய இயக்குனர்களினதும், பிரத்தியேக வகுப்பு நடத்துகின்ற ஆசிரியர்களினதும் கூட்டம் 28 - 07 - 89 மு.ப 10 மணிக்கு 58A ஸ்ரான்லி வீதியில் உள்ள Bond கல்வி நிறுவனத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம். (1272)


### 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னையா - சிவானந்தன்**
முகாமையாளர்
(ஆனந்தன் ரதி வாச் வேக்ஸ்)

பிறப்பு: 13-02-1943 — இறப்பு: 24 07 1983

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த
எம் அன்புச் செல்வமே!
ஆண்டுகள் பல கடந்தாலும்
அன்பு உள்ளங்கள் உங்களை
மறவாது; ஆண்டுகள் ஆறு
ஓடினாலும் அயர்ந்ததில்லை.

உங்கள் பிரிவால் துயரும்
மனைவி, பிள்ளைகள்,
நிஷாந்தி, பிரசன்னா, சிந்துஜா.

''நிஷாந்தி வாசா''
131/1, பலாலிறோட்,
திருநெல்வேலி, (1271)

### ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 - 04 - 1934 — மறைவு: 02 - 08 - 1988


**நாகமுத்து தம்பிஐயா**
திதி: 23 - 7 - 89

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் எங்களைப் பிரிந்து ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம். (11604)

### 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 20 07-1949 — மறைவு: 26-07-1986

**அமரர் திரு. கந்தசாமி கப்பித்தான் சபாபதி**
(சர்வோதயம்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! பொருள் தேடி வந்தாலும் புகழ் தேடிவந்தாலும் பொய்யான வாழ்வு வாழ நீங்கள் நினைத்ததில்லை. ஒருவருக்கும் தீங்கு இழைக்க ஒருபோதும் நினைக்காத நீங்கள் தெய்வமாகி விட்டீர்களே! என்றும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

உங்கள் பிரிவால் வாடிநிற்கும்
மனைவி, பிள்ளைகள்,
பப்பா, லேகா, மைத்துனர்,
சகலன்மார்.

தண்ணீர்த்தாழ்வு,
சட்டுவன். (11607)

### 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மாணிக்கவாசகர் குகலோஜன்**
தோற்றம்: 13-01-1951
மறைவு- 24-07-1979

அன்புடன் நினைவுகூரும்
அம்மா, தம்பி,
சகோதரிகள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. (11557)

### முதல் வருட திதியும் நினைவஞ்சலியும்



**செல்வி மாதங்கி சிவசுப்பிரமணியம்**

மலர்வு: 06.08.1980 — உதிர்வு: 04.08.1988
திதி: 24.07.1989

அன்பான செல்வமே!
எட்டாண்டுகள் எம்மை மகிழ்வித்து
எட்டாத இடத்தை எட்டிவிட்டாய்
உங்கள் பிரிவைத் தாங்காது நித்தம்
துயரத்தால் வாடுகிறோம் எதிலும் உங்கள்
நினைவு. எப்படியம்மா தாங்குவோம்.
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்லவனை இறைஞ்சுகின்றோம்.

நினைவால் துடிக்கும்,
அப்பா, அம்மா, அக்கா,
மற்றும்
உறவினர்கள்;

''நித்திலம்''
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.
(சி-3090)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**செல்வன் மாரிமுத்து ஆச்சாரி விஜயகுமார் (விஜய்)**
(யா/மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவன்)

மலர்வு: 06 · 02 · 1971 — உதிர்வு: 09 · 07 · 1989

எங்கள் இதயங்களில் குடிகொண்டு விட்ட
எமது அருமைப் புதல்வா! எங்கு குடிகொண்டீர்?
எதற்காக எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொள்ளச் சென்றீர்?
மரணம் என்பது எல்லா மானிடருக்கும் உண்டு
அதற்காக இப்படி ஒரு மரணமா!
பாரினில் புகழுடன் பலரும் போற்றிடப் பாங்குடன் வாழ்ந்தீர்!
பாழாய்ப்போன மரணம் உம்மை இழுத்து விட்டதே!
எத்தனை ஆசைகளை மனதினில் வைத்து இருந்தீர்!
எல்லாம் முடியுமுன்னே எங்கு சென்றீர்?
தாழ்வு ஏதுமில்லாத் தாய் தந்தை மகனாய்
சகோதரிகளுக்கு பாசமுள்ள அண்ணனாகவும்-
தம்பியாகவும் திகழ்ந்தாய்!
காலன் உன் அருகுவரக் ...... காவலனாய் நானில்லையே!
கோலமது கொடுமை - குமுறுகின்றேன் நின்பிரிவால்
உமது உடல்தான் எம்மைவிட்டுச் சென்றது
உயிர் எம்மோடுதான் உள்ளது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்:
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சாமியே சரணம் ஐயப்பா!

எனது மகனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும், பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 24 - 07 - 1989 திங்கள் கிழமை காலை 8 மணிக்கு கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் அன்று நண்பகல் 12 மணிக்கு எங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளுக்கும் தாங்களும் குடும்பசகிதம் சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
அன்பு அப்பா, அம்மா, அத்தான், அக்கா:
சகோதரிகள், மருமக்கள் உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்,

கா. மாரிமுத்து ஆச்சாரி,
164, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்; (1266)


25,000 ஆசிரியர் பயிலுநர் ஆட்சேர்ப்பு
போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி

## பொது அறிவு - பொது உளச்சார்பு

(1984, 87 Jan. 87 Aug நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி வினாத்தாள்களையும் - விடைகளையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் வெளியீடு - விலை ரூபா 65.50

யாழ்நகரில்:- பூபாலசிங்கம் புத்தகசாலை; ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்

மொத்தமாகப் பெற:-

**அஸ்ரன் பதிப்பகம் (இன்ஸ்ரிரியூட்)**

166/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்,
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1 ஆம் மாடி, (C/3071)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

பொருள்:

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.


# உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 4805
யாழ்ப்பாணம் 22073
24 - 07 1989 த. பெ. இல. 23


## விளையாட்டுப் பொம்மை ஆக்காதீர்!

வட்டம் சுற்றி ஓடும் போட்டியில், பந்தயக்காரர்கள் ஆரம்பித்த இடத்திலேயே முடிவில் சென்றடைவார்கள். அவ்வாறே இலங்கையின் கல்வித்துறைக் கொள்கைகளும், சுற்றுவட்டத்தில் ஓடி வருவதைக் காணலாம். ஒவ்வாதவை, பழையவை என்று ஒதுக்கப்பட்ட கல்வி நெறிமுறைகளும், வழிதுறைகளும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன. மாணவர்களைத் தாமாக வகுப்பேற்றும் முறை நிறுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பு அவற்றில் ஒன்று.

இலங்கை நாட்டுக்கு ஒரு தனியான "பாரம்பரியம்" உண்டு: அரசாங்கங்கள் மாறும்போது, கல்விக் கொள்கைகளும், நடைமுறைகளும் மாற்றப்படுவதுதான் அந்த வேண்டாத "பாரம்பரியம்". அரசுக்கு அரசு கல்விக் கொள்கையும், நெறிமுறைகளும் மாற்றப்படுவது மட்டுமன்றி, அமைச்சர்கள் மாறும்போதும் கல்விக் கொள்கைகள் மாற்றி அமைக்கப்படுவது இந்த நாட்டின் பெரும் சாபக்கேடாகிவிட்டது. சில சந்தர்ப்பங்களில் உயர் அதிகாரிகளின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ற விதத்திலும் நாட்டின் கல்விமுறை சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

மொத்தத்தில் கல்விக் கொள்கைகளும், நெறிமுறைகளும் எழுந்த மானத்தில், எப்படியும், எந்த நேரத்திலும் மாற்றக்கூடியவை என்ற ஆபத்தான நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. மாணவர்களின் கல்வியுடன், எதிர்காலச் சந்ததியினரின் கல்வியுடன் எப்படியும் விளையாடலாம் என்ற தன்மை இயல்பாக்கப்பட்டு விட்டது. கல்விக் கொள்கை என்பது பரீட்சித்துப் பார்ப்பதற்கும், பரீட்சார்த்தம் செய்வதற்கும், கண்டகண்டவாறு மாற்றப்படுவதற்கும் உரிய பண்டம் என்றாகிவிட்டது.

இப்படியான ஒரு செயற்கை இயல்பு நிலையில், புதிதாகப் பதவி ஏற்ற கல்வி அமைச்சர் திரு லொக்கு பண்டாராவும், அவரது அதிகாரிகளும் கல்வித்துறையில் பல புதிய மாற்றங்களை நாளாந்தம் அறிவித்து வருகிறார்கள். தினமும் சூரியன் உதிக்கிறதோ இல்லையோ, கல்வி நெறிமுறைகளில், வழிமுறைகளில் மாற்றங்கள் அறிவிக்கப்படும் என்பது ஒரு நிச்சயமான செய்தியாகி விட்டது!

இந்த மாற்றங்களின் அர்த்தம் என்ன? நோக்கம்தான் ஏது? பழையனவற்றைக் களைந்து புதிய திட்டங்கள், நெறிமுறைகளை அறிமுகப்படுத்தியவர்கள் தவறுவிட்டார்கள் என்பதா? நடைமுறையில் இருக்கும் வழிமுறைகள் தோல்வி கண்டுவிட்டன என்பதாலா? முன்னையவர்கள் செய்ததை, பின்னையவர்கள் மாற்றியே ஆக வேண்டும் என்ற கோட்பாட்டைக் கருத்தில் கொண்டா?

மாற்றங்கள் செய்யப்படும்போது எதற்காக, ஏன் என்று தக்க காரணங்கள் காட்டப்படுவதும் குறைவு. அதிகாரம் கையில் உள்ளதால் எதையும் எப்படியும் செய்யலாம்; எவரும் தட்டிக்கேட்க முடியாது என்ற போதையில் நாட்டின் கல்வித்துறையுடன் விளையாடி வருவது பெரும் ஆபத்தானதாகும்.

கல்வி ஒரு சமூகத்தின், நாட்டின் உயிர்நாடி. அதனைப் புரிந்துகொள்ளாது எழுந்த மானத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்து அதனைச் சோதனைப் பொருளாக்கி, விளையாட்டுப் பொம்மையாக்கி, அதனைப் போட்டிப் பதை அனுமதிக்க இயலாது.

அரசுகள் மாறினாலும், அமைச்சர்கள் மாறினாலும், அதிகாரிகள் மாறினாலும் கல்விக் கொள்கைகள், நெறிமுறைகள் திட்டங்களை எழுந்த மானத்தில், ஒருவர் அல்லது சிலர் மனதில் எழுந்த விருப்பத்தைச் செயற்படுத்தும் வாக்கில் கண்டபடி மாற்றும் செயற்கை இயல்பு உடைத்து நொருக்கப்படவேண்டும்.

கல்விக் கொள்கைகளை வகுக்கவும், கையாளவும், நெறிப்படுத்தவும் நிரந்தரமான தேசிய சபை ஒன்று அமைக்கப்படவேண்டும். அந்தச் சபையில் கல்விமான்கள், அதிபர்கள், அதிகாரிகள் இடம்பெறவேண்டும். அவர்கள் அரசியல், இன, மத அணிகள் என்ற குறுகிய வட்டத்திற்கு அப்பாற்பட்டு நியமனம் செய்யப்படவேண்டும்.

அந்தச் சபையினரும் கல்விக் கொள்கைகள், நெறிமுறைகளை மாற்றும்போது அவற்றுக்கான தகுந்த காரணங்களை முன்வைத்தே செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும். மாற்றங்களால் ஏற்படக்கூடிய தாக்கங்கள், பாதிப்புகள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

கண்ட பாவனையில் கொண்டை முடியும் போக்கு கல்வித் துறைக்கு ஆகாது. அது தேசிய சீர்கேட்டை உண்டாக்கி பிரஜைகள் வாழ்வைப் பாழடித்துவிடும். எனவே அதனைக் கைவிடுக.

## நடமாடும் செயலகம் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ் - கோட்டக்கல்வி அலுவலகம் நடமாடும் செயலகம் ஒன்றை நடைமுறைப் படுத்த இருக்கிறது.

யாழ் - கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி பகுதி பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள், ஆசிரியர்கள் பிரச்சினைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக அந்தந்த இடங்களிலேயே தீர்வு காண இந்த நடமாடும் செயலகத் திட்டம் உதவும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் செயலக அதிகாரிகள் நேரடியாக அதிபர்களை சந்திப்பதன் மூலம் அவர்கள் யாழ் - அலுவலகத்துக்கு வரவேண்டிய நிலை ஏற்படாது என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும், ஆயத்த வேலைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

இளைஞர், யுவதிகளுக்கு

# சுய தொழில் வாய்ப்பு வழங்க 5 கோடி 30 லட்சம் ரூபா நிதி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கத்துடன் 5 கோடி 30 லட்சம்ரூபா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஆலய பரிபாலன சபைகள் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இந்தநிதி மாவட்ட செயலகத் திட்டமிடல் பிரிவுகளில் பகிர்ந்தளிக்கப்படும்.

இந்த நிதியைப் பெறத் தகுதியுடைய நிறுவனங்கள் முதலில் தம்மைச் செயலக திட்டமிடல் பிரிவில் பதிவு செய்துகொள்ளவேண்டும் எனவும் பின்னர் அவை ஒருவருக்கு 5000 ரூபாவீதம் பகிர்ந்தளிக்க முடியும் எனவும் அறிய வருகின்றது.

இவ்வாறு வழங்கப்படும் நிதியைக் காண்டு ஆரம்பித்த தொழில் முயற்சியில் கிடைக்கும் வருமானத்திலிருந்து சிறிய தொகையாக இந்தநிதி மாதாந்தம் மீளளிப்புச் செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-13)

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில்

## நிர்மாண மேற்பார்வையாளர் பயிற்சி அக்டோபரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நிர்மாண மேற்பார்வையாளர் பயிற்சி நெறி ஒன்று முதல் தடவையாக கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

உலக வங்கி, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம், பிரிட்டிஷ் கவுன்சில் ஆகியவற்றின் அனுசரணையுடன்தேசிய தொழிற் பயிற்சிச்சபையால் இப்பயிற்சி நெறி நடத்தப்பட இருக்கிறது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் இப்பயிற்சி நெறியில் ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்கள் சேரலாம். 16—25 வயதுக்கு இடைப்பட்டவர்களே இப்பயிற்சி நெறியில் சேர முடியும்.

இத்திட்டத்தின் கீழ் வகுப்பறைப் பயிற்சிக்கு மாதமொன்றுக்கு 600 ரூபாவும், வெளிக்களப் பயிற்சிக்கு மாதமொன்றுக்கு 450 ரூபாவும் வழங்கப்பட இருக்கிறது. (3)

### மட்டு. மாநகரசபைக்கு புதிய ஆணையாளர்

மட்டக்களப்பு, ஜூலை 24

மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் திரு இரா. தியாகலிங்கம் மாநகரசபை ஆணையாளராகவும் நியமனம் பெற்றுள்ளார் (த-21)

### தட்டெழுத்தாளர் இல்லை

மன்னார்மக்கள் வங்கியில் ஆங்கில, தமிழ் தட்டெழுத்தாளர் இல்லாததால் பொதுமக்கள் தமது அலுவல்களை செய்வதில் கால தாமதம் ஏற்படுவதாக சொல்லப்படுகிறது.

இங்கு கடமையாற்றிய தட்டெழுத்தாளர் இடமாற்றம் பெற்றுச் சென்று இரண்டு வருடமாகியும் இப்பதவி நிரப்பப்படாததாலேயே இக் கஷ்டம் ஏற்பட்டதாக தெரிய வருகிறது. (த-117)

மீளக்குடியமர்வு நிவாரணம்:

## மாங்குளம் மக்கள் வங்கி 173 லட்சம் ரூபா வழங்கியது

மாங்குளம், ஜூலை 24

மாங்குளம் மக்கள் வங்கி ஊடாக இதுவரை 173 இலட்சம் ரூபா மீளக்குடியமர்தல் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணமாக மாங்குளம் மக்கள் வங்கிக்கு 230 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டது.

அதில் இதுவரை 173 இலட்சம் ரூபா நிவாரணமாக வழங்கப்பட்டதோடு தொடர்ந்தும் நாளொன்றுக்கு 100 பேர் வீதம் நிவாரணம் வழங்கப்பட்டும் வருகிறது.

மேற்குறித்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வன்செயலின் போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணங்கள் விரைவில் மாங்குளம் மக்கள் வங்கியில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றார். (த 94)

### 8 ஆம் திகதியே நாடாளுமன்றம்

கொழும்பு, ஜூலை 24

நாடாளுமன்றம் மீண்டும் வருகிறமாதம் எட்டாம் திகதி கூடும்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை வெள்ளியன்று முடிவடைந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் 58 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (உ-எ)

### அமைதிப்படை நிலைகொண்டது

வவுனியா, ஜூலை 24

வவுனியா - யாழ் வீதியில் உள்ள பிறவுண் அன் கம்பனி இயங்கி வந்த கட்டடத்திலும் அதனை அண்டிய இடங்களிலும் இந்திய அமைதிப்படையினர் நிலைகொண்டுள்ளார்கள்.

இதன் காரணமாக இப்பகுதியில் இருந்த சிலர் தமது இடங்களைவிட்டு வெளியேற நேர்ந்துள்ளது.

இதனிடையில் வவுனியா நகர எல்லைக்குள் அமைந்துள்ள சில முகாம்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முகாம்களின் வெளிப்புறம், சுற்றுப்புறங்கள் என்பனவற்றில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-164)

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்

## ஒரு கிலோ மீற்றர் பயணத்துக்கு 68 சதம் நஷ்டம் ஏற்படுகிறது!

இ. போ. ச.வில் ஒரு பஸ்ஸுக்கு 11 பேர் என்ற அடிப்படையில் 52,000 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். ஒரு பஸ் 1 கிலோ மீற்றர் பயணம் செய்யும்போது 68 சதம் நஷ்டம் ஏற்படுகிறது.

மேற்படி தகவல்கள் போக்குவரத்து அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிட்டுள்ள சில தகவல்கள் வருமாறு:-

ஒரு பஸ் 1 கிலோ மீற்றர் சேவையில் ஈடுபடுத்த செலவு 8 ரூபா. ஆனால் கிடைப்பது 7 ரூபா 42 சதம் ஆகும்.

இதனால் 1988 ல் வரவு 251 கோடி செலவு 280 கோடி 10 இலட்சம் ரூபா ஆகும்.

தேய்மான தொகை 14 கோடி 75 இலட்சம் ரூபா உட்பட கடந்த ஆண்டு 43 கோடி 90 இலட்சம் ரூபா நஷ்டமாகும்.

கடந்த மார்ச் 31 ஆம்திகதி வரை செலவு ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு வழங்கப்பட்டது 70 கோடி உட்பட 100 கோடி.

7012 பஸ்களில் 4408 பஸ்கள் சேவையிலுள்ளது. 1500 பஸ்களுக்கு உதிரிப்பாகங்கள் பொருத்துதல் வேண்டும். (த-21)

# மன்னார்ப்பகுதி மாதர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மன்னார்ப்பகுதி மாதர்களின் சுயவேலைவாய்ப்புக்கு உதவும் பல திட்டங்களை மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

மேற்படி மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் தொடர்பு அதிகாரி திருமதி வி. அரியசிங்கம் மேற்பார்வையில் பல திட்டங்கள் மாதர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மாதர் சங்கங்களின் கைப்பணிப் பொருள் விற்பனை நிலையம், கைப்பணி, விவசாயம், கால்நடை, சடலுணவுப் பொருள்களின் கண்காட்சி ஆகியவற்றை ஒன்றியம் நடத்தியுள்ளது.

★ விறகுவெட்டி உழைக்கும் பெண்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

★ இந்தியாவில் இருந்து திரும்பிய மாணவ, மாணவிகளுக்கு கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

★ மாதர்களுக்கு அலுமினியக் குடங்கள் வழங்கப்பட்டன.

★ பின்தங்கிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

கோப்பாய்

## ஆசிரியர் கலாசாலையில் மாணவர் இரத்ததானம்

### கூடுதலானோர் பெண்கள்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பலர் கடந்த புதன்கிழமை யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

கலாசாலை பயிற்சி அதிபர் செல்வி எஸ். சின்னப்பு தலைமையில் இரத்ததான வைபவம் நடைபெற்றது.

இரத்ததானம் வழங்கியவர்களில் 16 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தம் 25 பேர் முதற்கட்டமாக இரத்ததானம் வழங்கினர். (த-10)

## விடுமுறையில் வெளிநாடு சென்ற ஆசிரியர் விவரம் திரட்டப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

விடுமுறையில் வெளிநாடு சென்ற ஆசிரியர்களின் விவரங்களை யாழ் - கோட்டக்கல்வி அலுவலகம்திரட்ட இருக்கிறது.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்று விடுமுறை பெற்றுச் சென்ற ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பி வந்து தம் பதவிகளை ஏற்கவில்லை.

இதை அடுத்து திரும்பிய ஆசிரியர்கள் விவரம், திரும்பாத ஆசிரியர் விவரம் ஆகியவற்றை திரட்டும் வகையில் அவர்களின் விவரங்கள் அதிபர்களிடம் கோரப்பட்டுள்ளன. (இ-3)

## வாராந்த அறிக்கை வழங்க நிதி நிறுவனங்களுக்கு பணிப்பு

கொழும்பு, ஜூலை 24

சகல நிதி நிறுவனங்களும் தமது நிதிநிலைமை பற்றிய வாராந்த அறிக்கை ஒன்றை பிரதி வாரமும் சமர்ப்பிக்க வேண்டுமென மத்திய வங்கி பணிப்புரை விடுத்துள்ளது.

இந்த வாராந்த அறிக்கையைக் கொண்டு நிதி நிறுவனங்கள் ஒழுங்காகச் செயற்படுகின்றனவா என்பதை கண்காணிக்கலாம் என்றும்-

நிதி நெருக்கடியை எதிர்நோக்காத வகையில் உரிய நேரத்தில் உரிய ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க இத்திட்டம் வழி செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கடற்படை தாக்குதல்

ஸ்ரீலங்கா கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை நயினாதீவில் கடற்றொழிலாளர் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான குருநகர், ரெக்ளமேஷன் வாசி பாலு (வயது 25) என்பவர் தனியார் மருத்துவ நெறிவு வைத்தியநிலையத்தில் சிகிச்சை பெறு வருகிறார். (ஒ-51)

# அடிப்படைப் பிரச்சினைகளே நாடாளுமன்றத்தில் பேசப்படும்

### ஈரோஸ் பாலகுமார்

யாழ்ப்பாணம் ஜூலை 24

வடக்கு, கிழக்கு மலையகப் பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை வைத்தே நாம் நாடளுமன்றத்தில் பேசுவோம்.

இவ்வாறு ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமார் தெரிவித்தார்.

எமது ஈழவர் ஜனநாயக முன்னணி எதிர்க்கட்சியுடனோ அல்லது அரசசார்பாகவோ இருக்க மாட்டாது.

நாம் தனியான ஒரு குழுவாகவே இயங்குவோம்.

வடக்கு, கிழக்கு மலையகம் தமிழ் பேசும் மக்கள் அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படாத பட்சத்தில் அவை குறித்து நாம் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவோம்.

நாம் ஒவ்வொரு அமர்விலும் நாடாளுமன்றத்துக்கு சமூகம் கொடுக்க மாட்டோம்.

எமதுநாடாளுமன்றக் குழு சகல பகுதி மக்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவாகவே அமைந்துள்ளது என்றார் அவர். (-10)

## நாட்டில் 10 லட்சம் பேர் போதைப் பொருள் பாவிப்பு!

கொழும்பு ஜூலை 24

ஆண்டு தோறும் இலங்கைக்குள் 5 தொன் போதைப்பொருள் கடத்தப்படுவதாக போதைத் தடுப்பு பணியகவட்டாரங்கள் தெரிவித்தன,

கொழும்பு மாநகரில் மட்டும் 26 ஆயிரம் போதைப்பொருள் பாவனையாளர்கள் இருக்கின்றனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடு முழுவதிலும் சுமார் பத்து லட்சம் பேர் போதைப்பொருள் பாவித்து வருகின்றனர் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்திருக்கின்றது. (ஒ-எ)

### வீடமைப்புக் கடன்

கரவெட்டி, ஜூலை 24

1989ஆம் ஆண்டுக்கான வீடமைப்புக் கடனை கரவெட்டி மத்தொனிப் பகுதி மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க மத்தொனி திருவள்ளுவர் ஐக்கிய நாணய சங்கம் முயற்சி எடுத்து வருகிறது (த-70)

### கிராமசேவகர் இல்லை

நவாலிப் பகுதிக்கு நிரந்தர கிராம சேவை அலுவலர் கடந்த ஒருவருட காலமாக நியமிக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் முக்கிய அவசர அலுவல்களைச் செயற்படுத்த முடியாமல் கஷ்டமுறுகின்றனர். (ச-94)

### மண்டலாபிஷேக பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம் - நீராவிடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், கும்பாபிஷேகமலர் வெளியீட்டு விழாவும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள், சிவதர்மவள்ளல், திரு. க. கனகராசா ஆகியோரின் ஆசியுரைகளும், திருப்பனந்தாள் ஆதீனத் தேவார இசைமணி, திருமுறை வித்தகர் தாவடியூர், திரு. இரா. திருஞானசம்பந்தனின் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளன (ச)

### அனலைதீவு ஐயனார் கோயில் உற்சவம்

அனலைதீவு, ஜூலை 24

அனலைதீவு ஐயனார் கோயில் வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் 2 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 15 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். 16 இல் தீர்த்தோற்சவமும், 17 இல் பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும்.

ஐயனாரின் தேரின் மேற்பகுதி இம்முறை சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

### குருபூர்ணிமா விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் குருபூர்ணிமா விழா அனுஷ்டிக்கப்பட்டது. வழிபாடு முடிந்ததும் அடியார்களுக்கு உணவளிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்விப்பத்திர அறிவித்தல்

நீர்ப்பாசனத் திணைக்களம்
வவுனிக்குளப் பிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கு 10-8-89 முற்பகல் 10.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**நீர்ப்பாசன வேலைகள் — 03**

கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து 4-7-89 முதல் 8-8-89 வரை முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு இப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

— எந்திரி க. செல்வரத்தினம்
நீ. பொ., வவுனிக்குளம்.

நீர்ப்பாசனப் பணியகம்,
வவுனிக்குளம் (சி/2914)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A/L 89 வகுப்புகள்

**24-07-89 திங்கள் ஆரம்பமாகின்றன.**

Day Class மாணவர்களுக்கு வழமையான நேர அட்டவணையின் படி வகுப்புகள் நடைபெறும்.

**Week-end Class** மாணவர்களுக்கு 24-07-89 திங்கள் 8.00 a.m. வகுப்பு ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| 8.00 — 9.00 | LOGIC |
| 9.00 — 10.00 | ACCOUNTS |
| 10.00 — 11.00 | ECONOMICS |
| 11.00 — 12.00 | COMMERCE |

[சி-3087]

## நெடுந்தீவுக்கு தண்ணீர் பௌசர்

நெடுந்தீவு, ஜூலை 24

குழாய் நீர் விநியோகமற்ற நெடுந்தீவின் மேற்கு கிழக்குப் பகுதி மக்களின் நலன்கருதி நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம் பௌசர்ஒன்றை இங்கு தருவித்துள்ளது.

இதனை நெடுந்தீவு மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை தீர வாய்ப்பு உள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் திரு நா. இராமச்சந்திரன் கூறினார். (த-111)

## மட்டக்களப்பு செயலகத்தில் கம்பியூட்டர்

மட்டக்களப்பு செயலகத்தில் கம்பியூட்டர் கருவி தற்போது பொருத்தப்பட்டுள்ளது.

இங்கு புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் கம்பியூட்டர் மயப்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (த-21)

## பதவி வெற்றிடங்கள்

### விற்பனைப் பிரதிநிதிகள்

சுறுசுறுப்பும் இளம் வயதுமுடைய விற்பனைப் பிரதிநிதிகள் எமக்குத் தேவைப்படுகின்றனர்.

ஆகக் குறைந்த மேற்பார்வையுடன் குறிக்கப்பட்ட இலக்கு விற்பனையைத் தரக்கூடிய நிபந்தனை அடிப்படையில் யாழ்ப்பாணம் குடாநாடு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வேலை செய்யக்கூடியவர்களாக இவர்கள் இருக்க வேண்டும்.

**விண்ணப்பிப்பவர்கள், 30 வயதுக்கு உட்பட்டவர்களாகவும்,**

பிரபல நிறுவனம் ஒன்றில் குறைந்தது மூன்று வருடங்கள் விற்பனைத்துறையில் அனுபவம் பெற்றவர்களாகவும்,

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியும், ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதத்திலும், ஆங்கிலத்திலும் திறமைச் சித்தியும் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும்.

எமது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கக் கூடிய, பாவனையாளர் விற்பனையாளர் இடையே நல்ல உறவை நிலை நாட்டுபவர்களாக தலைமை அலுவலகத்துக்கும் வேலை செய்யும் இடத்துக்கும் இடையே ஓடியாடிப் பணிபுரியக்கூடியவர்களாக இருக்கக்கூடியவர்களையே நாம் எதிர்பார்க்கிறோம்

இத்தகுதிகளை நீங்கள் பெற்றிருப்பீர்களானால் உங்களுடைய முழுவிபரங்களுடன், உங்களுடைய உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் சிபார்சுடன் கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்:

**சிரேஷ்ட சந்தைப்படுத்தும் முகாமையாளர்**
**யுனிவேர்சல் மார்க்கெட்டிங் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,**
**65, கிருள்ள வீதி, கொழும்பு-5**

## 6 ஆம் வருட நினைவஞ்சலி



செல்வன்

### மகாதேவா இராஜகாந்தன் (பவுண்)

*(1983 இருண்ட ஆடிக் கலவரத்தில் மானிப்பாயில் அகால மரணமடைந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவரும்)*

மலர்வு: 26-03 1964 உதிர்வு: 24-07-1983

பாசமலராய் மலர்ந்து அன்பால் பண்பால் உயர்ந்து
அழியா வாழ்விற்குச் சென்றுவிட்ட எங்கள்
அன்புச் செல்வமே! உன் பொற் பாதங்களில்
கண்ணீர் மலர்களை அர்ச்சிக்கும்

அம்மா, தங்கை.

சண்டிலிப்பாய், வடக்கு. (1240)

## நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் அருகில்: 22 01-1969 ஆண்டவன் அருகில்: 08-06-1989

### செல்வி கா. சுதாயினி

[யா/ யூனியன்கல்லூரி மாணவி]

அன்பு மகளே! சுதா!
மதிமுகம் மறைத்ததேனோ
மலர் முகை மறைந்ததேனோ
புன்சிரிப்பால் மதிமயங்கினரோ
வண்ணம் தான் சதி செய்ததோ
கல்வித்திறமை தான் எதிரானதோ
கணித மேன்மை உன் பகையானதோ
கல்விக்கூடம் கவலை கொடுத்ததோ
துவிச்சக்கர வேகம் தனை மறந்தாயோ
தூய வாழ்க்கைக்கு வேகம் கொடுத்தாயோ
குடும்ப பாசத்தை துச்சமென மதித்தாயே
கூடும் உறவினரைக் கலங்க வைத்தாயே
எம் அன்பு பாசத்தைக் குறைக்க முடியாதே
உம் ஆத்ம சாந்தியை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம் அன்பு மறவாத:
அப்பா, அம்மா, அக்கா, அண்ணாமார், தங்கை, அப்பப்பா அம்மம்மா, உற்றார் உறவினர்கள்;

மரணச்சடங்கிலன்றும்பின்பும்வந்து உதவிகள் அனுதாபங்கள் வழங்கியவர்களுக்கும் இன்றும் கிரியைகள் உபசரணைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எங்கள் உள்ளார்ந்த நன்றியைக் கூறுகின்றோம்;

வணக்கம்

— குடும்பத்தவர்.

சுன்னாகம். [சி3079]

## 6 ஆவது சிரார்த்த தினம்



### செந்திநாதன் ஜயேந்திரன்

மலர்வு: 20 - 04 - 1966

உதிர்வு: 24 - 07 - 1983

அமிழ்தினும்
இனிய ஜயே!

ஆண்டுகள் ஆறு சென்றும் இழைக்கப்பட்ட கொடூரக் காட்சியை மறக்க முடியவில்லையே! உன் இனிய சுபாவங்கள் என்றும் எம்மனதை விட்டகலாது. உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உன்னை என்றும் மறவாத
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்கா,
தம்பி, மைத்துனர்.

'திருவேரகம்'
சங்கா, (1254)

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### ஆறுமுகம் ஜோன் தேவராஜா

(இரசாயனவியலாளர் சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)

தோற்றம்: 15 - 09 - 1942

மறைவு: 24 - 07 - 1983

நினைவுகளை இன்றும் நாம் தாங்குகின்றோம் - உங்கள் அணைப்புக்காய் என்றும் நாம் ஏங்குகின்றோம் - உங்கள் அறிவினையே பெறஇன்று நாடுகின்றோம் - அந்த அரிய வாய்ப்பை இழந்து நாங்கள் வாடுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,

பேத்தேல்.
புலோலி மேற்கு:
புலோலி. (1264)


டக் உறுதிமிக்கது, நீடித்துழைக்கும் திறமை வாய்ந்தது

டக் - வலிமைமிக்க நம்பத்தகுந்த பாரம் ஏற்றி. [illegible]

★ வலுமிக்க [illegible]
★ இரு [illegible]
★ [illegible]
★ ஒரு [illegible]

★ [illegible] 'சஸ்பென்சனும்'
★ [illegible] ★ 'எயர் ஹோண்'.
★ [illegible] ★ 5 மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேலான உதிரிப்பாகங்கள்.
★ 12 மாதங்களுக்கு/30,000 கி.மீ. ஓடும் வரை உத்தரவாதம்.
★ 3 இலவச சேவித்தல்கள்.

விற்பனை நிலையங்கள்: 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

முன்கையிருப்புக்கள் கிடைக்கும்.



இலங்கையில் பிரதான ஏஜென்ஸ் -
பிறீ லங்கா ரேடிங் கொம்பனி லிமிட்டெட்
409, காலி வீதி, கொழும்பு - 3.
தொலைபேசி: 575241 - 4. ரெலெக்ஸ்: 21147 பக்ஸ்: 575441

உதிரிப்பாகப் பகுதி,
168, நீர் கொழும்பு வீதி, பேலியகொடை.
தொலைபேசி: 530595, 530879.

உறுதிமிக்க நம்பத்தகு பாரம் ஏற்றி 'டக்' லொறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகக் கல்லூரிகளில் 80 இடங்கள் ஈழத்தமிழருக்கு

பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 40 இடங்களும் பொறியியல் கல்லூரிகளில் 40 இடங்களும் இலங்கைத் தமிழ் மாணவருக்கு ஒதுக்குவது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்திருக்கிறது.

ஈழம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் கோரிக்கையின் மீது 1989-90 கல்வியாண்டில் தொழில்நுட்பக் கல்விப்பணிப்பாளரின் கீழ் வரும் முன்கண்ட கல்வி நிலையங்களில் இந்த ஒதுக்கீடு வழங்கப்படும்.

இலங்கையில் இன்னமும் பதற்றம் தணியவில்லை. இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அகதி மாணவரின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க, அவர்கள் தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் தற்போது பெற்றுவரும் வசதிகள் நீடிக்கப்படவேண்டும் என ஈழத் தமிழ் அகதிகள் அமைப்பு கோரியிருந்தது. (உ-எ)

## போலந்தின் புதிய ஜனாதிபதி

போலந்தின் ஜனாதிபதியாக ஜெனரல் ஜருலவெஸ்கியை நாடாளுமன்றம் நேற்றுத் தெரிவு செய்தது.

அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியில் இருப்பார்.

புதிய ஜனாதிபதிக்கு சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லெச் வலேசா பாராட்டுத் தெரிவித்தார். (எ)

## காபூல் மீதான ரொக்கெட் தாக்குதலில் 40 பேர் பலி

காபூல், ஜூலை 23

முஜாஹிதின் கெரில்லாக்கள் நேற்று காபூல் மீது நடத்திய சரமாரியான ரொக்கெட் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சில ரொக் கட்டுக்கள் ஆப்கன் பிரதமரின் அலுவலகம் அருகேயும் விழுந்தன.

இதேவேளை—ஆப்கன் யுத்தம் பாகிஸ்தானுக்கும் பரவும் என்று ஆப்கன் அதிபர் டாக்டர் நஜிபுல்லா எச்சரித்து இருக்கிறார். (எ)


## அமைய சப்பாத்து தயாரிப்பாளர் பதவி வெற்றிடம்

யாழ்/அரசினர் போதனா வைத்தியசாலை

மேற்படி வைத்தியசாலையில் வெற்றிடமாயுள்ள சப்பாத்து தயாரிப்பாளர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளம் நாளொன்றுக்கு ரூபா 51/40 (மாதமொன்றுக்கு சகல படிகளுடன் ரூபா 1800/- வரை கிடைக்கும்)

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(2) வயதெல்லை 18—40 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(3) 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
(4) சப்பாத்து தயாரிக்கும் தொழிலில் போதிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 31-07-89ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பப்படுதல் வேண்டும்.

வைத்தியர் செல்வி புஸ்பம் சண்முகம்,
பணிப்பாளர்.
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-3085)


# இந்திய நாடாளுமன்றத்தில் ராஜீவ் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

# கொண்டுவர எதிர்க்கட்சிகள் முஸ்தீபு!

புதுடில்லி, ஜூலை 23

நாடாளுமன்றத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இது முடிவடைவதற்கு முன்னர் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் எல். கே. அத்வானி தெரிவித்தார்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டம் இதுவாகும்.

தற்போதைய கூட்டத் தொடர் சென்ற 18ஆம் திகதி ஆரம்பமானது.

அன்று தொடக்கம் எதிர்க்கட்சி எம். பிக்கள் பிரதமர் ராஜீவ் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரி நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்பி வருகின்றனர்.

போபேர்ஸ் ஊழல் தொடர்பாகவே இந்த குழப்பம் ஏற்பட்டுள்ளது. (எ)

## உயர்ந்த மனிதருக்கு பெனஸிர் 'குளுகுளு' கார் பரிசு!

ஆலம் சன்னு பாகிஸ்தானின் மிக உயர்ந்த மனிதர்.

அவரின் உயரம் 8 அடி 2.75 அங்குலங்கள்; வயது 37.

சிந்து மாகாணத்தைச் சேர்ந்த இவருக்கும் நஸீபா என்ற 28 வயதுப் பெண்ணுக்கும் அண்மையில் திருமணம் நடைபெற்றது.

திருமணப் பரிசாக பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ இவருக்கு 'குளுகுளு' வசதிபொருத்தப்பட்ட கார் ஒன்றைப் பரிசளித்திருக்கிறார். (ஓ எ)

## நாடு கடத்தல்

உலகிலே மிகப்பெரிய செல்வந்தரான அட்னன் கஷோகியை சுவிஸ் அரசு அமெரிக்காவுக்கு நாடு கடத்தியது.

மோசடி வழக்குகள் தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் திரு. கஷோகியை நாடுகடத்தும்படி சுவிஸ் அதிகாரிகள் கோரியிருந்தனர். (எ)

# அ. தி. மு. க. தலைவராக வீரப்பன்? வதந்தி என்கிறார் ஜெயலலிதா!

சென்னை, ஜூலை 23

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனை எக்காரணங் கொண்டும் அ. தி. மு. கவில் சேர்த்துக் கொள்ள மாட்டேன்.

செல்வி ஜெயலலிதா சென்னை போயஸ் கார்டன் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு அறிவித்தார்.

அச்சமயம் அ. தி. மு. கவில் மீண்டும் இணைந்து கொண்ட முன்னாள் அமைச்சர் வீரப்பனும் இணைந்து கொண்டார்.

மீண்டும் சேரத் தீர்மானித்தது குறித்து செய்தியாளரிடம் திரு. வீரப்பன் காரணம் தெரிவித்தார்.

கால நிர்ப்பந்தத்தினாலும் மீண்டும் சேரும்படி அ. தி. மு. க. தொண்டர்கள் விடுத்த உளப்பூர்வமான அழைப்புக்களையும் ஏற்றே தான் அ.தி. மு. கவில் சேர்ந்து கொண்டதாக திரு. வீரப்பன் தெரிவித்தார்.

''நான் ஏன் அ. தி. மு. கவில் சேர்ந்து கொண்டேன் என்பதை எதிர் காலம் சுட்டிக் காட்டும்'' — என்றார் திரு. வீரப்பன்.

பண்ருட்டி இராமச்சந்திரனை



ஜெயலலிதா

சேர்த்துக் கொள்ள முடியாது என்பதற்கு செல்வி ஜெயலலிதா காரணத்தைச் சொன்னார்.

''பண்ருட்டி இராமச்சந்திரன் விரும்பத்தகாதவர்; அழிவுச் சக்தியும் ஆவார்''— என்றார் ஜெயலலிதா.

அ. தி.மு.க. பிளவுக்கு பண்ருட்டி இராமச்சந்திரன் காரணமா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

ஜெயலலிதா: இக்கேள்விகளுக்கு எல்லாம் பதிலளித்து பண்ருட்டி இராமச்சந்திரனுக்கு தேவையில்லாத முக்கியத்துவம் அளிக்க விரும்பவில்லை.

முன்னாள் சபாநாயகர் திரு பாண்டியன் மீண்டும் அ. தி. மு. கவில் சேர விண்ணப்பிக்கவில்லை என்று ஜெயலலிதா சொன்னார்.

கேள்வி: திரு. வீரப்பனிடம் அ. தி. மு. க. தலைமைப் பதவியை ஒப்படைத்துவிட்டு நீங்கள் ஓய்வுபெறப்போகிறீர்களா?

ஜெயலலிதா: வதந்திகளுக்கு நான் பதிலளிக்க மாட்டேன்.

கேள்வி: நெடுஞ்செழியனைக் கட்சியில் சேர்த்துக்கொள்வீர்களா?

ஜெயலலிதா: அவர் தான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்று விட்டாரே.

இந்திரா காங்கிரஸுடனான தேர்தல் கூட்டுப்பற்றி செல்வி ஜெயலலிதா சொன்னதாவது:

எம்மைப் பொறுத்தவரையில் இந்திரா காங்கிரஸுடனான தேர்தல் கூட்டு இன்னும் இருக்கிறது.

[illegible]

எம்.பி. பதவியை இந்திரா காங்கிரஸுக்குகொடுத்தோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் தொகுதி பங்கீடு பற்றி இந்திரா காங்கிரஸுடன் அ. தி. மு க. இன்னமும் உடன்பாட்டுக்கு வரவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி புதுடில்லியில் இருந்துடெலிபோனில் என்னுடன் பேசினார். சென்னை திரும்பிய பின்னர் என்னுடன் தொகுதி உடன்பாடு பேசுவதாக அவர் சொன்னார்.

தி மு. க. அரசின் அடக்குமுறையை எதிர்த்து புதிய போராட்டம் ஆரம்பிப்பது பற்றி இந்திராகாங்கிரஸுடன் நான் பேசவிருக்கின்றேன்

எனது உடல் நிலை தேறிவருகின்றது. அதனால் எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பற்றவுள்ளேன்.

மார்ச் 25 ஆம் திகதி தமிழக சட்டசபையில் நடந்த சம்பவங்கள் பற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? என்ற கேள்வியை பிரதமரிடம் அல்லது ஆளுநரிடம்தான் கேட்க வேண்டும்.

இப்படி ஜெயலலிதா சொன்னார்.

## அதிபர் புஷ் வேண்டுகோள்

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்கள் நடத்துவதை கட்டுப்படுத்தும் சட்ட மூலங்கள் எதையும் கொண்டுவர வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டிருக்கிறார்.

அப்படிக் கட்டுப்படுத்துவது மத்தியகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவாது என்றும் திரு. புஷ் தெரிவித்தார். (எ)

## கடத்தல்காரரின் பரிதாப முடிவு

அம்மான், ஜூலை 23

வயிற்றுக்குள் வைத்துத் தைக்கப்பட்ட 200 கிராம் ஹெரோயின் கொண்ட இரண்டு பிளாஸ்டிக் பைகற்றுக்கள் வெடித்ததால் எகிப்தைச் சேர்ந்த பிரபல கள்ளக்கடத்தல்காரர் ஒருவர் உயிரிழந்தார்.

அல்-டஸ்ரூர் என்ற ஜோர்தான் பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டது. (உ-எ)

## தமிழக மேலவை

புதுடில்லி, ஜூலை 22

தமிழ்நாட்டில் மீண்டும் மேலவை அமைப்பதற்கான சட்டமூலம் இன்று ஆரம்பமாகும். நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வருகிற பொதுத்தேர்தலுக்கு முன்னர் நடைபெறும் கடைசி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் இதுதான்.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## ஆரம்பப் பாடசாலைக்கான தளபாட விநியோகம்

## கேள்வி அறிவித்தல்

யூனிசெப் திட்டத்தின் கீழ் ஆரம்ப பாடசாலைக்கான பின்வரும் மரத் தளபாடங்கள் விநியோகம் செய்வதற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 04 - 08 - 89 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். மரத் தளபாட வேலைகளிலும் தளபாட விநியோகத்திலும் அனுபவம் உள்ளவர்களது கேள்விகளே ஏற்றுக் கொள்ளப்படும்.

| | | எண்ணிக்கை | கேள்விப்படிவக் கட்டணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| 01. | வட்ட மேசை | 06 | ரூ. 100/- | ரூ. 500/- |
| 02. | சிறிய கதிரை | 35 | — | |
| 03. | சிறுவருக்கான சாப்பாட்டுமேசை | 05 | — | |
| 04. | சாப்பாட்டுமேசைக்கான வாங்கு | 05 | — | |
| 05. | ஆசிரியர் மேசை | 01 | — | |
| 06. | ஆசிரியர் கதிரை | 01 | — | |
| 07. | கண்ணாடி ஷோகேஸ் | 01 | — | |
| 08. | அலுமாரி | 01 | — | |

02. 02 - 08 - 89 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 00 மணிவரை மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவக் கட்டணமும் மீளளிக்கப்படக் கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் பேரில் மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
19 - 07 - 1989

[சி-2816]


## கோர்பச்சேவ் எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 23

ரஷ்யாவில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் கைவிடப்படும் நிலையை அடைந்திருப்பதாகத் தெரிகிறது.

வேலைநிறுத்தம் தொடரின் தனது அரசியல் சீர்திருத்தக் கொள்கைக்குப் பாதகம் ஏற்படலாம் என்று அதிபர் கோர்பச்சேவ் எச்சரிக்கை விடுத்ததே இதற்குக் காரணம் என்று தெரிகிறது. (எ)

## 10ஆவது ஆண்டுவிழா

மனாகுவா, ஜூலை 23

நிகரகுவாவில் 19-7-1979 இல் நடந்த புரட்சியைத் தொடர்ந்து 40 ஆண்டுகால சோமோஸா அரசு கவிழ்க்கப்பட்டு தற்போதைய அரசு பதவிக்கு வந்தது.

அதன் 10ஆவது ஆண்டு நிறைவுவிழா நேற்று மனாகுவாவில் கொண்டாடப்பட்டது. ஜனாதிபதி டானியல் ஒற்றேகா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## அமெரிக்க விமான விபத்தில் 130 பேர் பலி

வாஷிங்டன், ஜூலை 22

அமெரிக்க விமானம் ஒன்று ஐஓவா மாநிலத்தில் விபத்துக்குள்ளானதில் 130க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

### ஆண்களுக்கான ஹாக்கி

## நெதர்லாந்து சாம்பியன்

அமெரிக்கா ஜூலை 23

அமெரிக்காவின்மெடிலண்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான ஹாக்கிப் போட்டியில் நெதர்லாந்து அணி கனேடிய அணியை 5:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்ததன் மூலம் சம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது.

இந்திய அணி மூன்றாவது இடத்தைப் பெற்றது.

முதலாவது சுற்றில் கனேடிய அணியைத் தோற்கடித்த இந்திய அணி அரை இறுதி ஆட்டத்தில் எதிர்பாராதவிதமாகக் கனேடிய அணியிடம் 3:2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது.

ஆட்டநேர இறுதியின் போது இரு அணிகளுமே 2 கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தபோது வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் கனேடிய அணி வெற்றிக்கான இறுதிக் கோலைப் போட்டது.


## 2 ஆவது பிறந்ததின வாழ்த்து



செல்வன்
சரவணபவானந்தன் ஸ்ரீ கணேஷவேல்

கிளிநொச்சி ஸ்ரீ வேல்முருகன் ஸ்ரோர்ஸ் சரவணபவானந்தன் மனோகரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீகணேஷவேல் தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (24-07 1989) தனது பரவிப்பாஞ்சான் 'தணிகை' இல்லத்தில்சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அக்காமார் (மண்டைதீவு), அப்பம்மா, சித்தப்பா, அண்ணாமார், அத்தைமார், மச்சாள் (வேலணை G S), மாமா, அத்தை, மச்சாள் மச்சான், (W. Germany), ரூபன் மச்சான், (கௌரி கிளினிக்), Doctor மாமா குடும்பத்தினர், தாத்தா, அம்மம்மா அன்ரிமார், மாமாமார், அனைவரும் செல்வனை கிளிநொச்சி முருகன் திருவருளால் சகல செல்வங்களும் பெற்று சிறப்பாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[1268]



## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

89 ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள் யாவும் 24-07-89 வழமைபோல் நடைபெறும்.

— நிர்வாகி

[சி-2977]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வேல்படை மருந்து

இப்படை மருந்து தேமல், கக்கூஸ்பற்று, சொறி, சிரங்கு, கரப்பன், பூச்சிக்கடி, முதலிய சகல ரணங்களையும் குணமாக்கும்.

1 பெரிய டப்பி 12/-
1 சின்ன டப்பி 6/50

கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்
மருந்துக்கடை
(5) 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

24 07 · 1989 திங்கட்கிழமை

இயங்கம்வேர் தைலம்

இத்தைலம் தேகத்தில் உண்டாகும் சகல விதமான சொறி, கரப்பன், சிரங்கு, புண், கடி, குஸ்டம், கிரந்தி, சூலை வண்டுகடி, சில விசம் முதலிய வியாதிகளுக்குப் பூரிவரக் குணமாகும்.

2 அ. போத்தல் விலை 10/-

கிடைக்குமிடம்.
க. செ. கைலாசபிள்ளை அன் சன்ஸ்
மருந்துக்கடை
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## நிலாவெளியில்
## இலங்கை ராணுவம்மீது சூடு!
## அதிகாரி, சிப்பாய்கள் பலி!!

திருகோணமலை, ஜூலை 24

திருகோணமலை மாவட்டம் நிலாவெளியில் கடந்த வெள்ளியன்று இலங்கை இராணுவத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட மூவர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் வெள்ளி நண்பகல் 11-30 மணியளவில் நிலாவெளிக்கும் திருமலைக்கும் இடையில் 7 ஆம் கட்டையில் இடம்பெற்றுள்ளது.

நிலாவெளியிலிருந்து இலங்கை இராணுவத்தினர் திருகோணமலை நோக்கி வாகனத்தில் வந்துகொண்டிருந்த சமயம் வாகனத்தை நோக்கி சிலர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனராம். இதில் லெப்டினன்ட் வீரரத்தினவும் சிப்பாய்களான குமாரசிங்க, சமரசிங்க ஆகியோரும் மரணமாயினர். வேறு இருவர் படுகாயம் அடைந்தனர்.

(உ-150)

## டிரக்-சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

காங்கேசன்துறை, ஜூலை 24

வீதியால் சைக்கிளிலசென்று கொண்டிருந்த 15 வயது இளைஞன் ஒருவன் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

ஸ்ரீமலையைச் சேர்ந்த எஸ். ரங்கநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மயிலிட்டியில் இவ்விபத்து இடம்பெற்றதாகவும், படையினரின் டிரக் டன் மோதி இவர் உயிரிழந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்தது.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் மரண விசாரணை இடம்பெற்றது. உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

[ஒ-68]

## இவர்களே பாதுகாப்பு மாகாணசபை உறுப்பினருக்கு!

கொழும்பு, ஜூலை 24

மாகாணசபை உறுப்பினர்களுக்கு இனிமேல் தேசிய துணைப்படையைச் சேர்ந்தவர்களும் ஊர்காவல் படையினருமே பாதுகாப்பு வழங்குவர் அப்பணியில் தற்போது ஈடுபட்டுள்ள பொலீஸார் வாபஸ் வாங்கப்படுவர் என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பணிப்புரை ஒன்று பொலீஸ் தலைமையகம் விடுத்துள்ளது.

(ஒ-எ)

ஞானக்கதிர்

அன்பு-அறநெறி-ஆன்மீகம்

இந்துசமய மாத மஞ்சரி

இரண்டாவது இதழ் வெளிவந்துவிட்டது!

★ திருமுறை பாடக் கேட்டுத் திளைத்த போகர்
★ மகாத்மாவை மிஞ்சியவர் திருநீலகண்டர்
★ நினைப்பவர் மனமே கோயில்
★ நல்ல நாடு எது?
★ பிறந்தநாள் விழா பற்றிய சமயக் கண்ணோட்டம்
★ உயிர் வளர்க்கும் மூவாயிரந்தமிழ்
★ வேதத்தில் பொதிந்த விஞ்ஞானம்
★ ஓர் அடி வைத்தால் பத்தடி வைக்கும் இறைவன்

மற்றும் கருத்தாழம் மிக்க கட்டுரைகள், சமய சிறுகதைகள், கவிதைகள் மிளிர ஒளிவீசுகிறது ஞானக்கதிர்!

ஆதிபராசக் யின் பலவர்ண முகப்புப் படத்துடன் விற்பனையாகிறது!!

சமய அறிவைப் பெருக்க ஞானக்கதிர் படியுங்கள்!!!

உதயன்—சஞ்சிவி விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள். விலை: ரூ. 5/-

(C/3064)

சுருக்கெழுத்தாளர் - தட்டெழுத்தாளர்

பத்திரிகை அலுவலகத்தில், ஆசிரியர் பகுதி சுருக்கெழுத்தாளர் - தட்டெழுத்தாளராகப் பணி புரிவதற்கு அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழிலும், ஆங்கிலத்திலும் வேகமாகப் பணியாற்றும் திறமை உடையவராக இருக்க வேண்டும். கடிதத் தொடர்புகள் வைத்தல், கோவைகளைக் கையாளுதல் ஆகியவற்றில் தேர்ச்சி உடையவர்கள் விரும்பத்தக்கது

முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது சுய விவரங்களுடன் 31-7-1989க்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
நியு உதயன் பப்ளிகேஷன்ஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இரத்த ஜூலை குறித்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தாற்போல் அமைந்தது தான் வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்.

வெவ்வேறு அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த 53 தமிழ் விடுதலை போராளிகள் சிங்கள இனவெறி காடையர்களால் வெட்டியும், அடித்தும், குதியும்கோரத்தனமாககொன்ற இந்த இனப்படுகொலைகள் ஈழ வரலாறு என்றும் மறக்கமுடியாத கொலை பாதக நிகழ்ச்சியாகும். புத்தர் சிலைக்கு இரத்தாபிஷேகம் செய்து குட்டிமணியின் கண்ணைத்தோண்டி காட்சிக்கு வைத்து புத்த மதத்திற்கு பெருமை தேடியது சிங்கள இனவெறி அரசு.

அரசினதும் நீதி மன்றத்தினதும் கட்டுக்காவலில் இருந்த சிறைக்கூடத்தில்நடந்த இந்த இனப்படுகொலைகள் இன்று வரை எந்த நீதி விசாரணைக்கும் உள்ளாக்காதது ஸ்ரீலங்கா அரசின் நீதி பரிபாலனத்தை மட்டுமல்லாமல் கொலையாளிகள் யார் என்பதையும் முழு உலகும் அறியச் செய்துவிட்டது.

வெலிக்கடைச் சிறையில் உயிருக்காக சிங்களக் காடையர்களுடன் போராடி உயிர் தப்பி இருந்த போராளிகளைக் கூட பாதுகாக்க வக்கற்ற அரசு அவர்களை மட்டுநகர் சிறைக்கு மாற்றியது இதன் மூலம் தமிழ் போரகளிகளின் உயிருக்குப் பாதுகாப்பு தமிழ் பிரதேசம் தான் என்பதை பேரினவாதிகள் அன்றே மறைமுகமாக ஏற்றுக் கொண்டார்கள் ஆனால் அரசு சிறைகளில் எங்கிருந்தாலும் போராளிகளின் உயிருக்கு ஆபத்து வருமென கருதிய விடுதலைப் போராளிகள் மட்டுநகர் சிறையை தகர்த்து அங்கிருந்த அரசியல் கைதிகளை விடுவித்ததன் மூலம் இனவெறி அரசின் முகத்தில் ஓங்கி அறைந்த சம்பவத்தை இந்த நாடும், மக்களும் உள்ளவரை நினைவு கூர்ந்துகொண்டே இருப்பர்.

இன்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், திரு. வெற்றிவேல் யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலைகள் அதே ஜூலையில் அரங்கேற்றப்பட்ட சம்பவம் இந்த அரசின் இனவெறிப் போக்கு இன்னமும் மாறவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நிலையில் கூட இப்பேரினவாத அரசின் தயவில் தான் தங்கள் பாதுகாப்பு தங்கியிருக்கிறது என கருதுவோரும் இருக்கிறார்கள் என்றால் அது தமிழர்களின் துர்ப்பாக்கியமே தவிர வேறெதுவும் இல்லை.

ரஷ்ய நாட்டில் ஒரு இரத்த ஞாயிறு நினைவுகூரப் படுவது போன்று, எமது நாட்டில்என்றும் இரத்தஜூலை நினைவுகூரப்படும். வெலிக்கடைச் சிறைத் தியாகிகளுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி புரட்சிகர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த துயர் தோய்ந்த நிகழ்ச்சிகளை தமிழ் பேசும் மக்கள் துக்க தினமாக மட்டுமல்லாமல், ஸ்ரீலங்கா அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தினமாகவும் அனுஷ்டிக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமிழ் பேசும் மக்களை வேண்டிக் கொள்கிறது.

அநீதிகளுக்கும், துரோகிகளுக்கும் முடிவு கட்ட அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒன்றுபட்டு போராடுவோம்.

## எங்களது......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஒய்வு பெற்றேன்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இன்னும் கொஞ்சக்காலம் அமுல் நடத்திப் பார்க்கலாம் இந்த முறையின் கீழ் ஒரு ஜனாதிபதிதான் பணியாற்றினார். இந்த முறை சரியாக வேலை செய்கிறதா என்பதை தெரிவுக் கமிட்டி வைத்து பரிசிலனை செய்ய வேண்டும்.

நாட்டின் சரித்திரத்திலேயே தற்போதைய அரசமைப்புத் தான் பல திருத்தங்களுக்குள்ளானது. இதில் என்ன பிழை?

இந்தியாவின் நண்பனு வே நான் பதவிக்கு வந்தேன்; நண்பனாகவே பதவி விலகினேன்.

சுதந்திரத்துக்கு முன் இந்தியாவுடன் இலங்கை சமஷ்டி அமைப்பாக சேர வேண்டும் என்று நான் மட்டுமல்ல எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்காவும் விரும்பினார்.

இந்தியாவுடனை அப்படிப்பட்ட ஓர் முயற்சியில் சார்க் ஓர் அங்கமே.

நல்லெண்ணக் கரங்களை ராஜீவ் நீட்டினார். அதை நான் பற்றிக்கொண்டேன். இதில் என்ன பிழை? இன்று அவர்கள் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடுகிறார்கள்.

இது அசாதாரணமான நிகழ்ச்சியே. ஜே. ஆர்.-விடுதலைப் புலிகள் மோதலில் மத்தியஸ்தராக வந்தவர் ராஜீவ். இன்று ஒரு பக்கத்திற்காக அவர் போராடுகிறார். நான் (ஜே. ஆர்.) மத்தியஸ்தராகினேன்.

இது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்காக மக்கள் என்னைக் கண்டிப்பதா? எமது சார்பில் இந்திய வீரர்கள் இறந்தனர். அவர்கள் பணம் செலவாகுகிறது. நாம் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்குவது என்பது என் உள்மனதில் தோன்றிய ஒரு விடயம்.

நான் செய்யவிரும்பாததை -என்னைப் புகழ்ந்தோ அல்லது பயமுறுத்தியோ — என்னைக் கொண்டு செய்துவிட முடியாது. நான் அப்படிப்பட்டவன் அல்லன்.

ஆழ்ந்து சிந்தித்த பின்னரே அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன். அந்த ஒப்பந்தம்தான் இலங்கை நாட்டையும், மக்களையும் காப்பாற்றியது. அந்த நேரத்தில் எம்மை அழிவில் இருந்து காப்பாற்றியது இந்த ஒப்பந்தம் தான் -என்றார். (ஒ-எ)

## நாளை ஹர்த்தாலுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும்.

இதனையொட்டி வடக்கு கிழக்குப் பகுதிகளில் நாளை செவ்வாய்க்கிழமை நாம் நடத்தும் ஹர்த்தால் நடவடிக்கைக்கு ஒத்துழைக்கும் வண்ணம் தொழிற்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், மினிபஸ் சங்கங்கள் ஆகியவற்றையும் மற்றும் பொது மக்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இறந்த தினம் தமிழ்பேசும் மக்களுக்கு ஓர் அவலமான தினம் இதை நாம் உங்களுக்குதெரிவிக்க வேண்டியதில்லை வடக்கு — கிழக்கு பகுதிகளில் நம் மக்கள் சுதந்திரமாக எதையும் எடுத்துரைக்கவும், செயல்படுத்தவும் முடியாது என்பது எமக்கு நன்றாகப் புரியும் இந்த நிலையில்தான் நாம் இதை நடத்தும் வண்ணம் வேண்டுகிறோம்.—என்று ரெலோவின் மக்கள் தொடர்பு பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-எ)

## வல்வையில் பீரங்கி வேட்டு

வல்வெட்டித்துறை, ஜூலை 24

வல்வெட்டித்துறையில் கடலை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு கேட்ட இந்த வேட்டுச் சத்தங்களால் மக்கள் பெரும் பீதியடைந்தனர். (ஒ-160)

## ஆனைகோட்டை பெண் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்-நாச்சிமார் கோவிலடி, பொன். இராமநாதன் வீதியில் நேற்று முன்தினம் (22-07-89) இரவு 8 30 மணியளவில் பெண்ணொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி சீவரெத்தினம் (வயது 38) என்பவராவார். (ஒ-51)

## இளைஞன் சூட்டுக்குப்பலி

யாழ்ப்பாணம், ஜூலை 24

கோண்டாவில் பகுதியில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கந்தையா வேலாயுதகுமார் [வயது 24] என்பவரே மரணமானவராவர்.

இவரது சடலத்தை கோண்டாவில் அமைதிப்படையினர் யாழ்-ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (உ-10)

## சண்டிலிப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

சண்டிலிப்பாய் பகுதியிலும் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கனகசபை சிவநேசன் (வயது 22) என்ற இளைஞனே மரணமானவராவார். (உ-10)

## கோண்டாவிலில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கோண்டாவிலில் ரயில்நிலையத்திற்கு சமீபமாக நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் சுட்டுச் கொல்லப்பட்டார்.

மரணமானவர் நீர்வேலியைச் சேர்ந்த மகாலிங்கம் மகேஸ்வரன் (வயது 19)என்பவராவார். (ஒ-9 10)

## மட்டுவிலில்

சாவகச்சேரி, ஜூலை 24

மட்டுவில் வடக்கில் இருபது வயது இளம் பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை இரவு சுட்டு கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் காந்திமதி என்பவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## முள்ளியவளையில் தேடுதல்

முல்லைத்தீவு, ஜூலை 24

கடந்த சனியன்று பிற்பகல் 5 மணியளவில் முள்ளியவளை 6 ஆம் கட்டையடியில் துப்பாக்கி வேட்டுகளும் ஷெல் குண்டு வெடிப்புக்களும் தொடர்ந்து கேட்டன. இதனையடுத்து மாங்குளம் வீதியால் சென்ற வாகனங்கள் யாவும் திரும்பிவந்தன. சேத விவரம் தெரியவில்லை.

இதே நேரம் முல்லைத்தீவுப் பகுதியிலும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

(உ-92)

## எரிகாயத்தினால் மரணம்

யாழ்ப்பாணம் ஜூலை 24

எரிகாயங்களுக்குள்ளான ஒருவர் நேற்று மரணமானார்.

மரணமானவர் புங்குடுதீவு வாசியான அல்பிரட் (வயது45) என்பவராவார்.

இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-9)

## அமெரிக்க விஸா ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியவில்லை.

இந்த விஸாக்களைப் பெறுவதற்கு இலங்கையில் இருந்து 197 பேர் தெரிவாகி இருந்தனர் என்பது தெரிந்ததே.

(ஒ-10)

## வடமராட்சியில் 8 முகாம்கள் மூடப்பட்டன

பருத்தித்துறை, ஜூலை 24

வடமராட்சிப் பகுதியில் மூன்று இந்திய அமைதிப் படையினரின் முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

நாகர்கோவில் முகாம் மூடப்பட்டு தாளையடி முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், நவிண்டில் முகாம் முடப்பட்டு உடுப்பிட்டி முகாமுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் வல்லிபுரக் கோவில் இராணுவ முகாம் மூடப்பட்டு பலாலி முகாமுடன் இணைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மேலும் நேற்று புலோலி இராணுவமுகாமிலிருந்து பதினான்கு டிரக் வண்டிகளிலும் நடைபவனியாகவும் இராணுவ சிப்பாய்கள் பருத்தித்துறை முகாமுக்குச் சென்றனர்.

செல்லும் வழியில் அடிக்கடி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இச்செய்தி எழுதும்வரை உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

(ஒ-118)

## கிளிநொச்சி சம்பவத்தில் பொதுமக்கள் உயிரிழப்பு?

யாழ்ப்பாணம், ஜூலை 24

கிளிநொச்சி இரணைமடுச் சந்திக்குச் சமீபமாக உள்ள பட்டு உற்பத்தி பண்ணைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாம்.

இந்தச் சம்பவத்தில் படையினர் சிலரும், பதில் தாக்குதலில் பொதுமக்களில் நல்வரும் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தவர்களது சடலங்கள் நேற்று பட்டு உற்பத்தி பண்ணை வளவினுள் போட்டு எரிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

எனினும் இதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இந்தச் சம்பவத்தின்போது தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் சிலர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

சங்கரப்பிள்ளை மார்க்கண்டு [வயது 42] - கனகாம்பிகைகுளம், முனியாண்டி நடராஜா [வயது 42] - பாரதிபுரம், கோரமலை மலையாளம் (வயது 29] - இரணைமடு, இராமேஸ்வரன் சண்முகம் [வயது 15] - 155ஆம் கட்டை ஆகியோர யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[ஒ-உ-9]

## இந்திய எதிர்க்கட்சிகளின் 140 எம் பிக்கள்இராஜினாமா

புதுடில்லி, ஜூலை 24

இந்தியாவில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 140 எம்.பி.க்கள் தமது எம். பி. பதவிகளை இராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

''போபேர்ஸ்'' பேர ஊழல் தொடர்பாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள பிரதமர் ராஜீவ் காந்தி மறுத்ததைத் தொடர்ந்தே எதிர்க்கட்சிகள் இம்முடிவை மேற்கொண்டன என்று ஜனதா தள் தலைவர் திரு. வி. பி. சிங் தெரிவித்தார்.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற இதனைத் தவிர வேறு வழியில்லை என்று முதலமைச்சர் ராமராவ் தெரிவித்தார்.

(உ-எ

## திருமலை நகருக்கு மின் விநியோகம்

திருகோணமலை, ஜூலை 24

இலங்கை மின்சார சபையின் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ள போதிலும் திருகோணமலை நகருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு நன்கொடையாக வழங்கியுள்ள பத்து ஜெனரேட்டர்கள் நகரின் பல இடங்களிலும்—ஆங்காங்கே—வைக்கப்பட்டு, அவற்றின் மூலம் அவ்வப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-150)

## இரண்டு. ı

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில்அமைதிப் படை விலகல் பற்றிய கால அட்டவணையை உருவாக்கும் என்று நம்புகிறோம்.

—இப்படி மார்கரட் ரட்விலர் சொன்னார். (உ-எ)

மரண அறிவித்தல்

வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஆஷா)

சரசாலை வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஆஷா) 1989-07-22இல் அகால மரணமானார். இவர் வல்லிபுரம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (தொழில் நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை), கமலேஸ்வரன், இலங்கேஸ்வரன், நகுலேஸ்வரி (ஆசிரியை புசல்லாவ இளைஞர் தமிழ்க் கலவன் பாடசாலை), விமலேஸ்வரி (தாதிமார் சேவை அதிகாரி, பரந்தன்) கமலேஸ்வரி (இளைஞர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறீஸ்காந்தராசா, சிறீகாந்தரூபன், இராசகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பானுஜா, ஜானுகா, துவாரகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் சரசாலை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
— வல்லிபுரம்

(11608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 07 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.